"உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு"
ஆமோஸ் 4:12.

தேவ எக்காளம்



"...... நானோ என் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றினேன்". (யோசுவா 14:8)

"என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாயிருக்கிறபடியினாலும், உத்தமமாய் என்னைப் பின்பற்றிவந்தபடியினாலும் அவன் போய்வந்த தேசத்திலே அவனைச் சேரப்பண்ணுவேன்; அவன் சந்ததியார் அதைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்". (எண். 14:24)

Vol. 12] நவம்பர் 1980 [No. 11

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

"என் நேசர் வெண்மையும் சிவப்புமானவர்; பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்" (உன். 5:10)

கிறிஸ்துவின் காலத்தில் யூதேயாவின் ஆளுநராக (Governor) இருந்த புப்லியஸ் லெந்துலஸ் என்பவன் ரோமப் பேரரசன் திபேரியுவுக்கு நம்முடைய இரட்சகரைப்பற்றி பின்வருமாறு எழுதினான்:

"இங்கே இயேசுகிறிஸ்து என்று அழைக்கப்படும் ஒரு மனிதன் தோன்றியுள்ளார். அவர் மாபெரும் ஆற்றலுடையவர் பெரிய தீர்க்கதரிசி என்ற சிறப்புப் பட்டம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அவருடைய சீடர்கள் அவரைத் தேவ மைந்தன் என்று அழைக்கின்றனர். மரித்தவர்களை அவர் உயிரோடெழுப்புகிறார்; எல்லாவிதமான நோய்களையும் சுகமாக்குகிறார். அவர் உயரமானவர்; நன்கு பொருத்தமாக அமைந்த உடலுடையவர். அவர் முகத்தில் நிறைவும் அமைதி, அவரைக் காண்பவர்களின் அன்பையும், பயபக்தியையும் கவருகின்றது. புது திராட்சைப்பழச் சாற்றின் நிறங்கொண்ட அவருடைய தலைமுடி தோள்களுக்குக் கீழே சுருண்டு தொங்குகின்றது; நெற்றியில் இரண்டாகப் பிரிந்து நிற்கின்றது. அவருடைய நெற்றி தட்டையானது; அழகானது. அவர் முகம் எவ்விதக் குறைபாடும் இல்லாதது; மிக நேர்த்தியான செந்நிறங்கொண்டது. அவருடைய தோற்றம் கம்பீரமானது, மனதுக்குகந்தது; அவருடைய மூக்கும், வாயும் மிகப் பொருத்தமாக அமைந்தவை. அவருடைய தாடி அவருடைய தலைமுடி போன்ற நிறங்கொண்டது; அடர்த்தியானது; பிளவுபட்டது. அவருடைய கண்கள் சாம்பல் நிறமானவை; மிகவும் சுறு சுறுப்பானவை. அவர் பயங்கரமாகக் கண்டிக்கிறார்; ஆனால் மனதுக்கினிமையாகவும் அன்பாகவும் அறிவுரை கூறிப் போதிக்கிறார். அவர் முகம் ஆச்சரியமாகக் கவர்ச்சி செய்யும் ஆற்றலும் அமைதியும் வாய்ந்தது அவர் சிரிப்பதை யாரும் கண்டதில்லை; ஆனால் அவர் கண்ணீர் விடுவதை மக்கள் கண்டிருக்கின்றனர். அவர் நேராக உயர்ந்து வளர்ந்த உடலுடையவர். அவர் கைகள் பெரியவை; புயங்கள் மிக அழகானவை அவர் கொஞ்சம்தான் பேசுகிறார். ஆனால் ஆழ்ந்த கருத்தோடும் உள்ளார்ந்த அக்கறையோடும் பேசுகிறார். உலகிலேயே மிக அழகிய வடிவமைந்த மனிதன் இவர்தான்".

———

கர்த்தருக்குள் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக.

“கலகம் அதிகமாகிறதேயல்லாமல் தன் பிரயத்தனத்தினாலே பிரயோஜனமில்லையென்று பிலாத்து கண்டு தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்றான்.

அதற்கு ஜனங்களெல்லாரும் இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும், எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள்”. (மத். 27:24,25)

அன்று யூத ஜனங்கள் விரும்பிக் கேட்டுக்கொண்டபடி கிறிஸ்து பெருமானின் இரத்தப்பழியைத் தேவன் அவர்கள் கரத்திலேயே கேட்க வேண்டியதாயிற்று.

கி. பி. 70-ம் ஆண்டில் ரோம தளகர்த்தனான தீத்து எருசலேமுக்கு எதிராகவந்தான். அவன் நகரத்தின் கோட்டையை இடித்து சிறப்புமிக்கத் தேவாலயத்தைச் சுட்டெரித்து, எருசலேமையும் மண்மேடாக்கினான். அந்தக் கடும்போரில் கொல்லப்பட்ட யூதரின் எண்ணிக்கை 10 லட்சம் என்று கூறப்படுகின்றது. மாத்திரமல்ல, 50000 (ஐம்பதினாயிரம்) மக்களையும் அவன் அடிமைகளாகச் சிறைபிடித்துச் சென்றான். மீந்த யூதர்கள் உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டனர். இரத்தப்பழியின் காரியம் இத்துடன் முற்றுப்பெற்றுவிடவில்லை.

இரண்டாம் உலகப்போரின்போது கருணையற்ற கல்நெஞ்சினனான ஹிட்லர் மாத்திரம் $6\frac{1}{2}$ மில்லியன் அதாவது 65 லட்சம் யூதர்களைக் கொன்று குவித்தான். அந்த துயர சரித்திரத்தை இன்று நாம் படித்தாலும் நம் கண்களிலிருந்து கண்ணீர் தாரை, தாரையாக வடியும்.

கற்பனை பண்ணிப் பாருங்கள் 65 லட்சம் மக்கள்! இரக்கமற்ற முறையில் அவர்கள் அனைவரும் படுகொலை செய்யப்பட்டனர். யுத்த ஆரம்பத்தில் ஹிட்லர் யூதமக்களைச் சுற்றி வளைத்துப் பிடித்து ஜனசஞ்சாரமற்ற ஏகாந்தப் பகுதிகளுக்கு அவர்களைக் கொண்டுவந்தான். அவர்களைக் கொண்டே அவர்களது சவக்குழியைத் தோண்டச் செய்து நிர்வாணமாக அவர்களைக் குழிகளுக்கு முன்னர் நிற்கச் செய்து யந்திரத் துப்பாக்கியால் அவர்களைச் சுட்டுக் குழிகளுக்குள் தள்ளி மண்ணை மூடச்செய்தான். நூற்றுக்கணக்கான யூதர்கள் அணி அணியாக இவ்வாறு தினமும் சுட்டுத் தள்ளப்பட்டனர்.

நாட்கள் செல்லச் செல்ல இந்த எண்ணிக்கை மிகவும் அதிகரித்தது. ஆயிரக்கணக்கான யூதர்கள் தினமும் இவ்வாறு சுடப்பட்டனர். அவர்கள் செய்த ஒரே குற்றம் அம்மக்கள் யூதர்களாகப் பிறந்த ஒரே காரணத்தினாலேயேதான்.

அடால்ப் ஹிட்லர் என்ற அந்தக் கொடுந் தீயோனின் ஒரே நோக்கம் யாதெனில் ஐரோப்பாவிலுள்ள அனைத்து யூதர்களையும் களையெடுத்து ஐரோப்பாவை யூத இனமின்றிச் சுத்தாங்கம் செய்ய வேண்டுமென்பதுதான். தினமும் ஆயிரக்கணக்கான யூதர்கள் கொல்லப்பட்ட போதினும் அதில் அவன் சற்றும் திருப்தியடையவில்லை. அவனது அபிலாஷையும், தரிசனமும், குறிக்கோளும் பல லட்சங்களைக் கொல்லவேண்டுமென்பதிலிருந்தது. ஹிட்லரின் இந்தத் தீச்செயலின் சிந்தனையை செயலாற்றலில் கொண்டுவந்தவன் தான் அடால்ப் இச்மன் (Adolph Echmann) என்ற கயவன். இவன் ஹிட்லரின் இராணுவத் தளபதிகளில் ஒருவன் மாத்திரமல்ல, ஒரே நேரத்தில் பல ஆயிரக்கணக்கான மக்களைச் சில நிமிட நேரங்களில் கொன்று குவிக்கும் விஷவாயு அறைகளை (Gas chambers) நிர்மாணித்துக்கொடுப்பதில் சிரேஷ்டமாகச் செயல்பட்டவனும்கூடத்தான்.

இவ்வித பிரமாண்டமான விஷவாயு அலுமினிய அறைகள் அநேக இடங்களில் நிர்மாணிக்கப்பட்டன. Auschwitz and Treblinka என்ற இரு இடங்கள்தான் மிகக் கேடானவைகளாகக் கருதப்பட்டன. இவ்விடங்களிலிருந்த இராணுவத் தளங்களுக்குக் கொண்டுவரப்பட்ட யூத மக்கள்தான் திரள், திரளாகக் கொல்லப்பட்டனர். ஒவ்வொரு நாளும் 20,000 முதல் 30,000 மக்கள் வாயூட்டப்பட்டுக் கொல்லப்பட்டனர். ஐரோப்பா முழுமையிலுமிருந்து ரயில் வண்டிகள் யூதஜனங்கள் நிறைந்து வழியும் அளவுக்கு ஏற்றிவந்த வண்ணமாயிருந்தன. இவர்களில் கட்டுமஸ்தான உடலமைப்புப் பெற்ற வாலிபர்களை இராணுவத்தின் கடின வேலைகளுக்கும், இதர பணிகளுக்கும் பிரித்தெடுத்தனர். அழகான இளம் பெண்களை ஜெர்மானியப் போர்வீரர்கள் தங்கள் மனையாட்டிகளாகவும், மறுமனையாட்டிகளாகவும் தெரிந்தெடுத்தனர். இவை நீங்கலாக அனைத்து மக்களும் ரயிலிலிருந்து இறங்கி நேராக விஷவாயு அறைகளுக்கே வழிநடத்திச் செல்லப்பட்டனர்.

இந்த மக்களுக்கு ஒரு சிறிதளவு நம்பிக்கைதானும் இறுதி நேரம்வரை இல்லாமலே போயிற்று. விஷவாயு அறைகளுக்கு அனுப்புவதற்கு முன்னர் ஜெர்மானிய போர்வீரர் யூத மக்களைப் பார்த்து "முதலில் உங்களிலுள்ள பேன் எல்லாம் ஒழிக்கப்படும். அதன்பின்னர் உங்களுக்கு ஒரு நீராட்டல் உண்டு. அதற்கப்பால் புத்தாடைகள் உங்களுக்கு வழங்கப்பட்டு ஒரு வேலையும் அளிக்கப்படுவதுடன் வேறு இடங்களிலும் குடியமர்த்தப்படுவீர்கள்" என்று கூறினார்கள்.

இந்த மக்கள் அனைவரும் வஸ்திரமில்லாமல் நிர்வாணிகளாக விஷவாயு அறைக்குள் அனுப்பப்பட்டனர். ஒரே நேரத்தில் 4000 மக்களை இந்த அறைக்குள் அடைத்தனர். சிறு குழந்தைகளைக்கூட வு இரக்கமின்றி இவ்வித அறைகளுக்குள் போட்டு அடைத்து அறையின் கதவுகளைத் தாழ்ப்பாளிட்டனர். பேன் ஒழிப்புக்குப் பதி லாக அறையின் மேற்பகுதியிலிருந்து கொடிய விஷவாயு செலுத் தப்பட்டது. 8 அல்லது 10 நிமிட நேரங்கள்வரை அம்மக்கள் கொடிய அங்கலாய்ப்பிலிருந்தனர். அநேகர் தங்கள் தலைகளை அலு மினியச் சுவற்றில் மோதி அடித்தனர்; புழுவாய்த் துடிதுடித்தனர். ஒரே அழுகையும், புலம்பலும், துயர ஓலமும் அந்த அறைக்குள் சில நிமிட நேரம்வரைக் கேட்கப்பட்டது. அவ்வளவுதான், காரியம் முடிந்துவிட்டது. வாயு அறைக்கதவு திறக்கப்பட்டது. மடிந்து கிடக்கும் திரள்கூட்டம் மக்களை அப்படியே அகற்றி அக்கினி அடுப் பில்வைத்துப் பொசுக்கிவிடுகின்றார்கள். இவ்விதமாகப் பல மாதக் கணக்கில் ஜெர்மனியிலும், போலந்திலும் நடைபெற்றிருக்கின்றது.

ஐரோப்பாவின் மிகக் கொடிய உபத்திரவ நாட்கள் என்று இதனை அழைக்கின்றனர். இவ்விதமானதோர் கொடிய சம்பவம் மீண்டும் ஒருமுறை இந்த உலகத்தில் நடந்துவிடக்கூடாது என்று நாம் அனைவரும் விரும்புகின்றோம். ஆயினும், இதைக் காட்டிலும் பல கோடி மடங்கு மா பயங்கரமானதோர் கொடிய வேதனையின் காலம் நம்முடைய இந்தத் தலைமுறையையே சந்திக்கவிருக்கின் றது. அது விரைந்து வந்துகொண்டிருக்கின்றது.

"ஏனெனில், உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்ப வித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திர வம் அப்பொழுது உண்டாயிருக்கும்" (மத். 24:21) என்று கர்த்த ராகிய இயேசுதாமே கூறியிருக்கின்றார்.

இந்தக் கொடிய உபத்திரவ காலம் ஏழு ஆண்டு காலம் அதா வது இரண்டாம் உலக மகா யுத்தத்தைவிட நீண்ட நெடு நாட்க ளிருக்கும். அந்நாட்களில் உலகமெங்கும் பரவலாகக் கடும் பூமி யதிர்ச்சிகளும், கொடிய புயல்களும், பஞ்சங்களும், கொள்ளைநோய் களும், மனித அறிவுக்கெட்டாத நூதன வியாதிகளும், எண்ணிக் கைக்கடங்காத தற்கொலைகளும், ஒழுக்கச் சிதைவுகளும், சாத்தா னித்துவமும், கொடுஞ்சித்திரவதைகளும், வெகு ஜன எழுச்சியும், உலக யுத்தமும், அணுகுண்டுகளாலான பேரழிவுகளும், சர்வாதி காரம் போன்றவை தலைவிரித்தாடும். அந்த நாட்கள் விரைந்து நெருங்கிக் கொண்டிருக்கின்றன.

கடந்த மாதம் பத்தாம் தேதி வடமேற்கு அல்ஜீரியாவில் ஏற் பட்ட பூமியதிர்ச்சியை நாம் அறிவோம். ஏறத்தாழ 70,000 மக்கள் அங்கு மாண்டுபோனதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறின. மக் கள் தங்களது மத்தியான உணவை வாயில் எடுத்து வைத்துச் சாப்

பிட்டுக் கொண்டிருந்த வேளையில்தானே பூமி அவர்களை அப்படியே விழுங்கத் தொடங்கிற்று. 156 படுக்கைகளைக் கொண்ட ஜாலிஃப் என்ற விடுதியில் 300 மக்கள் அப்பொழுது உணவருந்திக் கொண்டிருந்தனர். அவர்கள் அனைவருமே சில நொடிப்பொழுதிற்குள்ளாகப் பாதாளம் சென்றுவிட்டனர்.

பூமியதிர்ச்சி நடந்த நேரம் ஒரு குடும்பத்தின் தலைவன் வீட்டிலில்லை. அவன் 160 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மற்றொரு இடத்திற்குச் சென்றுவிட்டான். பூமியதிர்ச்சி ஏற்பட்டதைக் கேள்விப்பட்ட அவன் அங்கிருந்து ஓடோடி வந்தான். தான் வாழ்ந்த வீட்டைப் பார்த்தான். அந்தோ, அவனது வீடு சரிந்துகிடந்தது, ஆனால், அவன் உள்ளே செல்லமுடியாது. சுவர் வழியாக அவன் பார்த்தபோது கீழே குழிக்குள்ளிருந்து தனது மனைவி எழுப்பிக்கொண்டிருக்கும் அபயக்குரலை அவன் கேட்டான். அவளை மீட்க அவனால் முடியாது. அவனது 5 பிள்ளைகளும் மாண்டுவிட்டனர். துயரம் தோய்ந்த அவன் கண்ணீர்ப் பெருக்குடன் "கடவுளின் சித்தம், கடவுளின் சித்தம்" என்றுகூறிப் புலம்பிக் கொண்டிருந்தானும்.

அன்பார்ந்த ஆண்டவருடைய பிள்ளையே, தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படியும், அவருடைய சித்தத்தின்படியும், கொடிய காலங்கள் பூமியைச் சந்திக்கப்போகின்றன. ஈரானும், ஈராக்கும் இதை எழுதுகையில் 37-வது நாளாகக் கடும் போர் புரிந்துவருகின்றது. இதன் முடிவுகள், திருப்பங்கள், வல்லரசுத் தலையீடுகள் அனைத்தும் கர்த்தரின் கரத்தில் மாத்திரம்தான் உள்ளது. இந்தப் பாவ உலகினுக்கு எவ்விதப் பயங்கர ஆபத்து எந்த நேரம் வரும் என்று எவரும் சொல்லுவதற்கில்லை.

வல்லரசு நாடுகள் ஒவ்வொன்றும் 60,000-க்கும் அதிகமான மிகவும் அழிவாற்றல்கொண்ட அணுகுண்டுகளையும், 100-க்கும் அதிகமான எண்ணிக்கையில் மா பயங்கரமான கண்டம்விட்டுக் கண்டம் பாயக்கூடிய ICBM ஏவுகணைகளையும் தங்கள்வசம் தற்போது வைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இவை அனைத்திற்கும் மேலாக 1982-ம் ஆண்டு டிசம்பர் மாதம் நிகழவிருக்கும் கிரகங்களின் துல்லியமான சேர்க்கை இவ்வுலக விஞ்ஞானிகளுக்குப் பெரும் பரபரப்பை உண்டாக்கியுள்ளது. இவ்விதமாகக் கிரகங்கள் கடந்த 4000 ஆண்டு காலமாக ஒருபோதும் இணைந்து ஒரே நேர்க்கோட்டில் வரவில்லையாம். இந்த 'கிரகங்களின் சேர்க்கை' பற்றி விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து "Jupiter Effect" என்னும் புத்தகத்தை எழுதியுள்ளார்கள், இரு விஞ்ஞானிகள். ஒருவர் இங்கிலாந்திலிருந்து வெளியாகும் 'நியூ ஸயின்டிஸ்ட்' பத்திரிகையைச் சேர்ந்த ஜான் கிரிப்பன்; மற்றொருவர் அமெரிக்காவின் தலைசிறந்த ஆராய்ச்சிக்கூடமான 'நாஸா'

(Nasa)வைச் சேர்ந்த ஸ்டீபன் பிரேவேகிமன். அவர்கள் கீழ்க்கண்ட வாறு கூறுகின்றனர்:-

"சூரியனைச் சுற்றும் எல்லாக் கிரகங்களும் ஒரே நேர்க்கோட்டில் சூரியனுக்கு ஒரு பக்கமாகச் சுழலும்போது 40 சதவீதம் அதிகமான பலத்த சூரியப்புயல் அலைகள் (Solar Storms) சூரியனின் மேற்பரப்பில் தோன்றும். இவை எண்ணில்லாத அணுக்கூறுகளை (Atomic Particles) ஆகாயத்தில் செலுத்தும். இதனால் நம்மைச் சுற்றியுள்ள காற்று அலைகள் பாதிக்கப்பட்டு உலகப் பருவநிலையில் பல மாறுதல்களையும் ஏற்படுத்தும். 1982-ல் இந்த கிரகச் சேர்க்கையினால் உலகின் பல பாகங்களில் கடல் கொந்தளிப்பும், புயல் காற்றும் உண்டாகும். ரேடியோ போன்ற தொலைத் தொடர்புகள் பாதிக்கப்படுவதோடு, வானிலையே ஒரு 'கலக்கு கலக்க'ப்படும்".

இவையனைத்தையும்விடக் கவலைதரும் விஷயம்-பூமியின்சுழற்சியில் ஏற்படும் பெருந்தடை. இதனால் பூமியே ஒருமுறை தூக்கிப் போடப்படலாம்! ஒருவேளை அத்தகைய குலுக்கல் நிகழ்ந்தால் அதன் விளைவு கொடுமையானதாக இருக்கும் என்று கவலை தெரிவிக்கின்றார் லண்டன் வானியல் கூடத்தின் இயக்குநர் ஜான் எப்டன் (John Ebdon.)

இந்தக் கிரகச் சேர்க்கையால் ஏற்படக்கூடிய மற்றொரு கொடிய ஆபத்து என்னவெனில் ஆகாய வீதியில் உலகினைச் சுற்றி வந்துகொண்டிருக்கும் 4500 பிரமாண்டமான விண்கலன்கள் அந்நாட்களில் சூரியனில் உண்டாகும் வெப்பக் கதிர்வீச்சால் எரிந்து பூமியில் விழுந்து பேரழிவுகளை இவ்வுலகினுக்கு உண்டாக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

பூமியிலே இவ்விதமான கொடிய உபத்திரவ காலம் உண்டாகுமுன்பு கர்த்தருடைய இரகசிய வருகை எந்த நேரத்திலும் இனி இருக்குமென்று உலகமெங்கிலுமுள்ள பரிசுத்தவான்கள் எதிர்நோக்கியவண்ணமிருக்கின்றனர்.

தம்முடைய பக்தர்களைத் தம்மண்டை அழைத்துக்கொள்ள மேகங்களின்மேல் வரப்போகும் அருமை இரட்சகர் இயேசுவின் வரவை முன் அறிவிக்கும் தேவதூதன் எக்காளத்தை ஊதுவதற்காகக் கரங்களில் தூக்கி வாயில்வைத்து ஆயத்த நிலையில் நின்றுகொண்டிருக்கின்றான் என்று நிச்சயமாக நாம் நம்புவதற்கு அனைத்துச் சாத்தியக்கூறுகளும் இடமளிப்பதாயிருக்கின்றன.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் பாப்புவா நியூகினியா என்ற இடத்தில் பக்தியுள்ள இரண்டு கிறிஸ்தவ இளம் பெண்கள் ஒரே இரவில் தனித்தனியே ஒரு தரிசனம் கண்டனர். முதற்பெண் தனது தரிசனத்தில் தேவதூதன் ஒருவன் எக்காளம் ஒன்றைக் கரத்

தில் தூக்குவதைக் கண்டாள். இரண்டாம் பெண் தேவதூதன் ஒரு வன் எக்காளம் ஒன்றைத் தூக்கித் தனது உதடுகளில் வைத்தவனாக எக்காளத்தை ஊதப்போகும் ஆயத்த நிலையில் நிற்பதைக் கண்டாள். பெண்கள் இருவரும் அடுத்தநாளில் தங்கள் தங்கள் ஆலயத்தில் இதனைச் சாட்சியாக அறிவித்தனர். 10 மைல்கள் தொலைவிலிருந்த அவ்விருவரின் தரிசனமும் ஒன்றாயிருப்பது பின்னர் ஆச்சரியத்துடன் கண்டுபிடிக்கப்பட்டது.

அன்பின் கர்த்தர் வெகு சீக்கிரம் வரப்போகிறார். அதில் ஒரு துளிதானும் சந்தேகம் கிடையாது. அவரைச் சந்திக்க ஆயத்தப்படுவோம். தினமும் நமது வாழ்வைப் பரிசுத்தமாகத் தேவ பெலத்தைக் கொண்டு காத்துக்கொண்டு ஆண்டவருடன் ஏனோக்கைப் போல நெருங்கிச் சஞ்சரிப்போம். (ஆதி. 5:24) நமது வாழ்க்கையில் சரிபண்ணவேண்டிய காரியங்களைச் சரிசெய்து ஒப்புரவாக வேண்டியவர்களுடன் ஒப்புரவாகி, ஈடு செலுத்தவேண்டியவர்களுக்கு ஈடு செலுத்தி இவ்விதமாக நாம் நமது வீட்டுக் காரியங்களை (விண் வீட்டுக் காரியங்களை) ஒழுங்குபடுத்திக் கொண்டு (2 இரா. 20:1) அருமைக் கண்மணியாம் கர்த்தரின் வரவை ஆவலுடன் எதிர்நோக்கிக் காத்திருப்போம்.

N. சாமுவேல்.

ஒரு ஆத்துமாவின் விலைமதிப்பு!

(Evangelist JOHN R. RICE)

“மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன்ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?

மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?” (மாற். 8:36,37)

இந்த வார்த்தைகளைக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துதாமே கூறினார். உன்னுடைய ஆத்துமா விலைமதிப்பிடமுடியாததொன்றாகும். உலகத்திலுள்ள அனைத்துப் பொக்கிஷங்களும் கொட்டப்பட்டு, இதுவரை நடந்துள்ள அனைத்து யுத்தங்களில் சிந்தப்பட்ட வெகு திரளான இரத்தத்தைக் கொண்டும் உன் ஆத்துமாவை விலைக்கிரயமாகக் கொண்டுவிடமுடியாது. சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும் நீண்ட நெடுநாள் காலப்போக்கில் ஒளிமங்கி, அனலிழந்து, குளிர்ந்து தணிந்துபோகலாம். ஆனால் உனது விலைமதிப்பிட முடியாத ஆத்துமா முடிவற்ற நித்திய யுகா யுகங்களில் மோட்சத்திலோ அல்லது அக்கினியும் கந்தகமும் எரிகிற தீக்கடலிலோ எங்கோ ஓரிடத்தில் நிலைத்து வாழ்ந்துகொண்டிருக்கும்.

இவ்விதமான விலைமதிப்பிட முடியாத ஒப்பற்ற நித்திய செல்வமான உனது ஆத்துமாவை உனது சிறிய மதியீனத்தினிமித்தம் நீ இழந்துபோகலாம்,

"மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?" "மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" என்று இயேசு கூறினார். இப்பார்தலத்திலுள்ள எல்லாப் பொருட்களையும்விட ஒரு ஆத்துமா விலையேறப்பெற்றதாகும். எல்லா ஐசுவரியங்கள், வங்கிகள், இரயில்வேக்கள், கையிருப்புகள், பெரும்பண்ணைகள் யாவற்றைக்காட்டிலும் ஒரு ஆத்துமாவின் மதிப்பு அதிகமாகும். உலகத்தின் எல்லா சந்தோஷங்களைக்காட்டிலும் அது விலையேறப்பெற்றது. உலகத்தின் எல்லா இனிமையான வாத்திய இசையைக்காட்டிலும் அது சிறப்புமிக்கது. முழு உலகத்தையே ஒரு தட்டில் ஏற்றினாலும் அதின் மதிப்பை அழிவற்ற ஆன்மாவுக்கு ஈடாக்கிவிட முடியாது.

நரகத்தின் கொடிய உக்கிரகத்தில் யுகா யுகங்களாக ஆத்துமா அனுபவிக்கக்கூடிய அங்கலாய்ப்பின் வியாகுலங்களை முன்வைத்து நோக்குவோமானால் ஒரு ஆத்துமாவின் விலைமதிப்பு என்ன?

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து (மத். 5:22; 10:28; 13:40-42; 13:49,50; 18:8,9) போன்ற வசனங்களில் நரகத்தைக்குறித்துத் திட்டம், தெளிவாகக் கூறியிருக்கின்றார்.

"சர்ப்பங்களே, விரியன்பாம்புக் குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வீர்கள்?" (மத். 23:33) என்று அவர் கேட்டார்.

"அப்பொழுது, இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" (மத். 25:41) என்ற வார்த்தைகள் பவுல் அல்லது ஏசாயா அல்லது பேதுரு அல்லது யாக்கோபு அல்லது யோவான் போன்றவர்களின் வாயிலிருந்து புறப்படாமல் அன்பின் இயேசுவானவரது வாயிலிருந்தே புறப்பட்டன.

46-ம் வசனத்தில் "அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்" என்று பார்க்கின்றோம். நரகத்தைக்குறித்து நாம் இதுவரைப் பார்த்தவைகள் அனைத்தும் மத்தேயு சுவிசேஷத்தில் மாத்திரம் இடம் பெற்றவைகளாகும்.

லூக்கா சுவிசேஷம் 16-ஆம் அதிகாரத்தில் ஐசுவரியவான், லாசரு விருத்தாந்தத்தை அருமை இரட்சகர் குறிப்பிடுவதைக்

காண்கின்றோம். அச்சரித்திரத்தின் இறுதியில் ஐசுவரியவான் ஆபிரகாமிடத்தில் "தகப்பனே, எனக்கு ஐந்து பேர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி லாசரு போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கவேண்டுமென்று" கெஞ்சிக் கேட்பதை நாம் பார்க்கின்றோம். காணப்படாத இரகசிய உலகத்தின் அந்தரங்கமான இந்தக் காரியங்களைக் கூறியது யார்? அன்பின் கர்த்தர் இயேசு ஒருவரே. நரகத்தைக்குறித்து எத்தனை அடிக்கடி அவர் பிரசங்கித்தார்!

ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட ஆத்துமாக்கள் நரகபாதாளத்தில் அனுபவிக்கும் கொடிய பயங்கர வேதனைகளின் கண்ணோட்டத்தில் நான் உங்களிடம் கேட்கப்போவது யாதெனில் ஒரு ஆத்துமாவின் விலைமதிப்பு என்ன என்பதே. நஷ்டப்பட்ட ஏழைப் பாவியே உனது ஆத்துமாவின் விலைமதிப்பு என்ன? தாயே, உன்னைவிட்டு மரணத்தின்மூலமாகக் கடந்துசென்றுவிட்ட உனது மகனது ஆத்துமாவின் விலைமதிப்பு எவ்வளவு? தகப்பனே, உனது அன்பான மகளின் ஆத்தும விலைமதிப்பு என்ன? அன்பான மனைவியே, உனது புருஷனின் ஆத்தும விலைமதிப்பு எவ்வளவு? வியாபாரியே, உன்னுடன் வேலைசெய்யும் மனிதனுடைய ஆத்தும விலைமதிப்பு என்ன? உன்னுடன் பஸ்ஸில் தினமும் பிரயாணம்செய்யும் பக்கத்து மனிதனின் ஆத்தும மதிப்புயாது? நீ தினமும் அவனிடம் பருவகாலத்தைப்பற்றியும், அரசியலைப்பற்றியும், யுத்தத்தைப்பற்றியும், லீவு நாட்களை மனமகிழ்வுடன் களிக்கும் விதம்பற்றியும் இன்னும் ஆயிரம் மற்ற காரியங்களைப்பற்றியும் பேசுகின்றாயேதவிர அவனது இருளடர்ந்ததும், நஷ்டப்பட்டதுமான ஆத்துமாவைப் பற்றி நீ எப்பொழுதாவது சம்பாஷித்ததுண்டா? நரகத்தின் கொடிய வேதனைகளைப் பார்க்கும்போது அந்த ஆத்துமாவின் விலைமதிப்பு என்ன?

நரகத்தைக்குறித்து இயேசுகிறிஸ்துவானவர் சொன்னதை உங்களில் எத்தனை பேர் விசுவாசிப்பீர்களோ என்பதைக்குறித்து நான் ஆச்சரியமடைகின்றேன். வானத்திலும், பூமியிலும் சர்வ அதிகாரம் பொருந்திய இயேசுவானவர் பூரண அதிகாரத்துடன் நரகத்தைக்குறித்துச் சொன்ன வார்த்தைகளைக்குறித்து "இயேசு இரட்சகர் நரகத்தைக்குறித்துச் சொன்னவைகளை அப்படியே நான் விசுவாசிக்கின்றேன்" என்று சொல்லுவீர்களா? மனந்திரும்பாமல் மரிக்கும் ஒவ்வொரு ஏழைப் பாவியும், மறுபடியும் பிறவாமல் மரிக்கும் ஒவ்வொருவரும் கிறிஸ்து இரட்சகர்மேல் நம்பிக்கைவைக்காமல் பாவங்களுக்காகப் பட்சாதாபப்படாமல், தேவன் அருளும் புதிய இருதயத்தைப்பெறுமல், இரட்சிக்கப்படாமல் கிறிஸ்துவின்றி மரிக்கும் ஒவ்வொருவரும் நரகம் என்ற நித்திய வேதனையுள்ள இடத்திற்கே செல்லுவார்கள்.

நரகம் என்பது மெய்யாகவே வேதனையுள்ளதோர் இடம் என்று நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா? "வேதனை" (Torment) என்ற பதத்தை அன்பின் ஆண்டவர் லூக்கா 16-ம் அதிகாரத்தில் தான் பயன்படுத்தியுள்ளார். "இந்த அக்கினி ஜுவாலையில் வேதனைப்படுகிறேனே" "வேதனையுள்ள இடம்" என்ற பதங்களை அங்கே நாம் காண்கின்றோம்.

நரகத்தில் அக்கினி உண்டு என்று நான் விசுவாசிப்பதற்காக மன்னிப்புக் கோரவேண்டிய அவசியமேது? நரகத்தில் அக்கினி உண்டு என்று கர்த்தர் சொல்லியிருக்கத்தக்க நரகத்தைக்குறித்துப் பிரசங்கிக்கும் நான் நரகத்தின் அக்கினியைப்பற்றிப் பிரசங்கியாதிருப்பது எப்படி? எதற்காக நரகத்தைப் பேசக்கூடாது? எனது பிரசங்கத்தைக் கேட்கும் குருவான சகோதரனே, இதைக்குறித்து உன்னால் நல்லதொரு விளக்கம் கொடுக்கமுடியுமா? நரகத்தில் அக்கினி உண்டு என்று நீங்கள் விசுவாசிப்பதில்லையா? இந்த ஐசுவரியமுள்ள மனிதன் இன்றுவரை அந்த அக்கினி ஜுவாலைகளில் கிடந்து புழுவாய்த் துடித்து அழுந்தி அல்லலுற்றுக்கொண்டிருக்கின்றான் என்பதை நீங்கள் விசுவாசிப்பதில்லையா?

ஐயோ, அந்த ஏழை ஐசுவரியவான் இன்று நரகபாதாளத்தில் கிடக்கின்றான். இப்பொழுது நாம் அவனை ஐசுவரியவான் என்று அழைப்பது எத்தனை பரிகாசச் சொல் என்று நீங்கள் எண்ணுகின்றீர்கள்! கொழுமையான ஆகாரங்கள் சிலபொழுதுகள் அவன் சாப்பிட்டமையால் நாம் அவனை ஐசுவரியவான் என்று அழைக்கின்றோம். அந்த மனிதனிடம் சில இரத்தாம்பரமான ஆடைகளும், மினுக்கான மெல்லிய உடைகளும் இருந்தமையால் நாம் அவனை ஐசுவரியவான் என்று அழைக்கின்றோம். ஆனால், அந்தோ! கடந்த 2000 ஆண்டுகாலமாக அவன் நரகத்தில் அடைந்துகொண்டிருக்கும் வேதனை எத்தனை அதிகம் என்று எண்ணுகின்றீர்கள்? தனது நாவைக் குளிரப்பண்ண ஒரு துளித் தண்ணீர் கிடைக்குமானால் அதற்காக அவன் தனது அனைத்துச் செல்வத்தையும் கொடுத்துவிடுவான். பரிதாபம்! இவனைத்தான் நாம் ஐசுவரியவான் என்று அழைக்கின்றோம். இயேசுவானவர் சொன்னதுபோல அந்த மனிதன் நரகத்தில் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்றான் என்று நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா?

நரகம் என்ற வேதனையுள்ள இடத்தில் மக்கள் அழுகின்றார்கள்; அங்கே அவர்கள் ஜெபிக்கின்றார்கள்; அவ்விடத்தில் அவர்கள் நினைவு கூருகின்றார்கள்; இரட்சிப்பின் பொன்னான சந்தர்ப்பங்கள் தங்கள் கரங்களிலிருந்து நழுவிச்சென்ற வேளைகளை நினைத்துக் கதறித் துடிக்கின்றனர்; இரட்சிக்கப்படாத தங்களுக்கு அருமையான மக்கள் மரித்து எரி நரகிற்கு வரப்போவதை எண்ணி துயரடைகின்றனர் என்பதை நீ விசுவாசிக்கின்றாயா? "ஆம் சகோதரனே,

மிகவும் துக்கத்துடன் நான் அதனை ஒத்துக்கொள்ளுகின்றேன். ஏனெனில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தாமே அப்படிக் கூறியிருக்கின்ருர். நரகம் அக்கினியும், கந்தகமும் கலந்து எரியும் வேதனையுள்ள இடம். அது நித்திய நினைவுகூருதலின் இடம் என்று நம்புகின்றேன் " என்று என்னிடம் கூறுகின்றீர்களா? மெய்தான். ஆபிரகாம் அந்த ஐசுவரியமுள்ள மனிதனைப் பார்த்து "மகனே அதை நினைத்துக்கொள்" என்று கூறினன். நரகமானது மக்கள் சிந்திக்கும், வார்த்தைகளைக் காதுகளினுல் கேட்கும், கதறி அழும், இருதயத்தை ஊற்றி ஜெபிக்கும் ஒரு இடமாகும். பரிசுத்த வேதாகமமும் அப்படித்தான் சொல்லுகின்றது. நரகத்தின் நித்திய வேதனையின் கண்ணோட்டத்தில் ஒரு ஆத்துமாவின் விலைமதிப்பு என்ன?

சற்றுத்தாமதி. மோட்சத்திலுள்ளோர் தாங்கள் விரும்பினுல் நரகத்திற்குச் சென்று அங்குள்ளோரைத் தேற்றிவிட்டு வரவும், அப்படியே நரகத்திலுள்ளோரும் மோட்சத்திற்கு வந்து அதின் பாக்கியங்களைச் சற்றுநேரம் அனுபவித்துவிட்டு மீண்டும் நரகிற்குச் செல்லவும் முடியாதவாறு மோட்சத்திற்கும், நரகத்திற்கும் இடையே ஒரு பெரும் பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கின்றது என்பதை நீ விசுவாசிக்கின்ருயா? வேதனையின் அக்கினி நரகத்தில் சதாகாலமும் எரிந்துகொண்டிருக்கின்றபடியால் அங்குள்ளோருக்கு இராப்பகலாக இளைப்பாறுதலே கிடையாது. தேவனுடைய வசனமும் "அவர்களுடைய வாதையின் புகை சதாகாலமும் எழும்பும்......" (வெளி. 14:11) என்று அதை ஊர்ஜிதப்படுத்துகின்றது. நரகத்தில் கிடந்து வேதனையுறும் ஆத்துமாக்கள் நித்திய, நித்திய காலமாக அங்கு கிடந்து அழுந்திக்கொண்டிருப்பார்கள் என்று நீ விசுவாசிக்கின்ருயா? ஓ, கர்த்தர்தாமே தமது மட்டில்லாத இரக்கத்தால் அந்தஇடத்திற்கு நாம் செல்லாதபடி நம்மைக் காத்துக்கொள்ளுவாராக. இவைகள் அனைத்தையும் உண்மையென்று நாம் விசுவாசித்தும் மக்களை இரட்சிப்புக்குள்ளாக வழிநடத்தாமல் நிர்விசாரமாயிருப்பது விந்தையாயிருக்கின்றதல்லவா? நரகத்தில் கிடந்து துடித்துக் கொண்டிருக்கப்போகும் உன்னைச் சுற்றியுள்ள ஆத்துமாக்களுக்காக உன் உள்ளம் பாரமடைந்து உன் கண்கள் கண்ணீரை வடித்து உன்முகம் ஏங்கல்களால் வீங்கிப் போகாமலிருப்பது வியப்பானதாயிருக்கின்றது.

கடந்த இரவு நீ நன்ருகத் தூங்கிமலர்ந்த முகத்தோடும், பிரகாசமான கண்களோடும் இன்று காலையில் கண்விழித்தாய். உனது தூக்கத்தில் ஒரு சிறிய பகுதியைக்கூட நீ இழந்து போகவில்லை, ஒரு துளிக்கண்ணீர்தானும் நீ சிந்தவில்லை. உனது தலையணை உனது கண்ணீர்த்துளிகளால் ஈரமாகி நனைந்து போய்விடவில்லை. என்ற போதினும் வேதனையுள்ள நரகம் ஒன்று உண்டென்றும், கிறிஸ்து இரட்சகரைப் புறக்கணிப்போர் அங்கு செல்லுவார்கள்

என்றும் நீ விசுவாசிக்கின்ருய்! நீ இருக்கக்கூடியதான இந்த கிளீவ்லாண்ட் பட்டணத்தில் கடந்த இராக்காலம் யாரோ ஒருவர் மரித்து நரகத்தில் போய்க் கண்திறந்தார் என்றும், அந்த மனிதனிடம் அவரது இரட்சிப்பைக்குறித்து நீ இனி ஒருபோதும் சம்பாஷிக்க முடியாது என்று நீ அறிந்துள்ள போதினும் இன்று நீ உன் வயிறு நிரம்ப உணவு அருந்தியிருக்கின்ருய், வருகிற நாட்களிலும்கொழுமையான ஆகாரங்களை நீ சுவைத்து ஆனந்தமாகச் சாப்பிடப் போகின்ருய். உனது படுக்கையில் நீ மனமகிழ்வுடன் படுக்கப் போகின்ருய் உனது மனம் ஆகாரத்திலும், உடைகளிலும், வீட்டை அலங்கரிப்பதிலும், அழகான தட்டுமுட்டு ஜாமான்களை வாங்குவதிலும், பணம்சம்பாதிப்பதிலும், விருந்துகளிலும், கலியாணங்களிலும், புகழ் தேடுவதிலும் இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கின்றது.

நாளொன்றுக்கு ஒரு நூறுஆயிரம் மக்கள் முடிவில்லாதநித்தியத்திற்கு விரைந்து கடந்து செல்லுகின்ருர்கள். எனினும், நாம் நன்ருக உண்டு, உறங்கி எழும்புகின்ரேம்.

அப்போஸ்தலனுகிய பவுல் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்தி சொன்னதைக்குறித்து (அப். 20:31) நான் வியப்படையவில்லை. நான் ஏன் அவ்விதம் அழியும் ஆத்துமாக்களுக்குச் செய்யவில்லை என்று என்னைக்குறித்துத்தான் ஆச்சரியப்படுகின்றேன் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததன் காரணமாகத் தான் கல்லெறியுண்டு சாகும்போது ஸ்தேவான் மிகுந்த சந்தோஷத்தோடு தனது ஆவியை ஆண்டவரது கரங்களில் ஒப்புவித்ததைக்குறித்து நான் ஆச்சரியப்படவில்லை. ஆனல் இந்த கிளீவ்லாண்ட் பட்டணத்திலுள்ள ஒருவராகிலும் எப்பொழுதாவது அழியும் ஆத்தும மீட்பினிமித்தம் ஒரு கல் எறியோ அல்லது நாறிப்போன ஒரு முட்டை எறியோ வாங்கவில்லையே என்றுதான் நான் வியப்புறுகின்றேன். இந்த ஆத்தும அறுவடைப் பணியின் காரணமாக உங்கள் முகத்தில் ஒருவரும் எப்பொழுதாவது துப்பவில்லையே அல்லது ஒரு நண்பனையோ, ஒரு வேலையையோ, ஒரு டாலர் நாணயத்தையோ நீங்கள் இழந்துபோகவில்லையே என்றுதான் நான் ஆச்சரியப்படுகின்றேன். ஆத்தும வாஞ்சையற்ற, ஆத்துமாக்களுக்காக கண்ணீர்சிந்த மனமற்ற, அழியும் ஆத்துமாக்களுக்காக வேதனைப்பட்டு அங்கலாய்க்கச் சிந்தையற்ற, மடியும் ஏழைப்பாவ மனுக்குலத்திற்காகக் கர்ப்பவேதனைப்பட விருப்பமற்றதான கிறிஸ்தவர்கள் தண்டனைக்குள்ளாகாதபடிக் கர்த்தர் தமது தயவுள்ள இரக்கத்தைக் காட்டுவாராக!

உங்களில் அநேகர் மனந்திரும்பாத உங்கள் பிள்ளைகளை உங்களுடன்வைத்து வளர்த்துவருகின்றீர்கள். அவர்கள் அணியும் ஆடைகளில் நீங்கள் விருப்பம் காட்டுகின்றீர்கள். அவர்களுடைய

பழக்க வழக்கங்களில் நீங்கள் மனமகிழ்ச்சி கொள்ளுகின்றீர்கள். அவர்களது கல்வியில் நீங்கள் அக்கறை காண்பிக்கின்றீர்கள். அவர்களுடைய கலியாண காரியங்களிலும், அவர்களை வாழ்க்கையின் முன்னேற்றப் பாதைகளில் வழிநடத்துவதிலும் தீவிர கவனம் செலுத்துகின்றீர்கள். ஆனால் அந்தோ, அவர்கள் விலையேறப்பெற்ற ஆத்துமாக்களைக்குறித்து நீங்கள் சற்றும் கவலை கொள்ளுவதில்லை. நீங்கள் இது விஷயத்தில் எத்தனை குருடர்கள் தெரியுமா? நீங்கள் ஒரு அஞ்ஞானியா? அல்லது ஒரு புறமதஸ்தனா? அல்லது ஒரு நாஸ்தீகனா? கிறிஸ்துவைப் பொய்யன் என்று எண்ணுகின்றீர்களா? அவரது வேதபுத்தகத்தைக் கட்டுக்கதை என்று எண்ணியிருக்கின்றீர்களா? கிறிஸ்தவ மார்க்கம் ஏதோ ஒரு ஹாஸ்ய நாடகம் என்ற நினைப்பு உங்களுக்குள்ளதா? இதன் காரணமாகத்தான் நரக அக்கினிக்குச் செல்லும் பாவிகள் விஷயத்தில் நீங்கள் கவலை காண்பிக்காமல் அப்படியே கல்நெஞ்சினர்களாகவிருக்கிள்றீர்கள்.

ஒரு ஏழை ஆத்துமாவின் விலைமதிப்பு என்ன? மனந்திரும்பாமலும் இரட்சிப்படையாமலும், பாவங்கள் மன்னிக்கப்படாமலும் இரட்சிக்கப்படுவதற்கான மீண்டுமொரு சந்தர்ப்பமின்றி முடிவற்ற, நித்திய யுகா யுகங்களான அழுகையும், பற்கடிப்பும் நிறைந்த அக்கினிக் கடலுக்குக் கடந்துசெல்லும் ஒரு ஏழை ஆத்துமாவின் விலைமதிப்பை என்னவென்று சொல்லுவது? அழியும் ஆத்துமாக்கள் பேரில் நாம் பரிதாபம்கொள்ளத் தவறுவோமானால் நமக்குப் பலத்த அடிகள் உண்டு. கர்த்தர்தாமே நமக்கு இரங்குவாராக!

இவ்வுலகத்திலுள்ள யாவற்றையும் நான் எனக்கெனக் கொண்டிருந்தபோதிலும் அதினால் எனக்கு யாதுபயன் உண்டு? சர்வதேசப்புகழை நான் அடைந்து நரகத்திற்குச் செல்லும் ஒரு ஆத்துமாவை நான் தடுக்க இயலாவிடில் எனது புகழினால் எனக்கு என்ன பயன்? ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணும் ஒரு ஏழை மனிதனாக இவ்வுலகில் நான் இருப்பதையே மனதார வாஞ்சிக்கின்றேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நான் அந்த மேன்மையான ஊழியப் பணியாளனாயிருக்கின்றேன். இந்த உலகத்தில் செய்யக்கூடிய ஒரே ஒரு பயனுள்ள வேலையான ஆத்தும ஆதாயப் பணியையே நான் செய்துகொண்டிருக்கின்றேன். நரகத்திற்குச்செல்லத் தீவிரிக்கும் ஆத்துமாக்களை அதினின்று பாதுகாக்கும் பணியையே நான் செய்கின்றேன். ஓ நரகத்தின் அவியாத நித்திய அக்கினியுடன் ஒப்பிடும் பட்சத்தில் ஒரு ஆத்துமாவின் விலைமதிப்பு யாது?

எனது பிரசங்கத்தின் மூலமாகத் தொடப்பட்ட ஒரு வாலிபனோடு நேற்று நான் பேசிக்கொண்டிருந்தேன். தேவன் தமது கரத்தை அவன்மேல் வைத்திருக்கின்றார் என்பதனை நான் நிச்சயமாகக் கண்டு கொண்டேன். "பிரசங்கம்பண்ணுவதற்கான அனுமதியைத் தேவனிடம் நீ ஏன் கேட்கக்கூடாது? உனது காலத்தை

யும், பணத்தையும் நீ ஏன் வீண்விரயம்பண்ணிக்கொண்டிருக்கின்றாய்? சீக்கிரமாகக் கடந்துசெல்லக்கூடிய கொஞ்சம் அழுக்கடைந்த டாலர்களுக்காகவா நீ கரிசனையுள்ளவனாயிருக்கின்றாய்? ஒருகிறிஸ்தவன் தனது வயிற்றுக்கான ஆகாரத்தைக்காட்டிலும், தனது சரீரத்தை மறைக்கும் ஆடைகளைக்காட்டிலும், தனது மனைவியும் குழந்தைகளும் குடியிருக்கக் கூடியதான சிறியதொரு வீட்டைக்காட்டிலும் அழிந்துபோகும் ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணும் மேலான பணி ஒன்றையே குறித்துக் கரிசனையுடையவனாயிருக்கவேண்டும். உலகப்பிரகாரமான மற்றதேவைகளையெல்லாம் தேவன் கவனித்துக் கொள்ளுவார்'' என்று நான் அவனிடம் கூறினேன். ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணுவதற்கான அனைத்து உதவிகளையும் தேவன் நமக்குச் செய்வார். ஒரு ஆத்துமாவின் விலைமதிப்பு என்ன என்று நான் உன்னிடம் கேட்கின்றேன்.

ஏழைப்பாவியே, நான் சொல்லுவதைக் கவனி. பரிசுத்தரும், மகா அன்புள்ளவரும், மிகுந்த இரக்கமுள்ளவரும், நீடிய சாந்தமுள்ளவரும், இந்த உலகத்தில் அங்குமிங்கும் நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்தவருமான கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நித்திய வேதனையுள்ள நரகம் ஒன்று உண்டெனத் திட்டமாகக் கூறியுள்ளார். உன்னுடைய ஆத்துமாவின் விலைமதிப்பு என்ன? நீ உனது ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுக்கமுடியும்?

மேற்கு தீபெத் (லடாக்) சுவிசேஷ ஊழியச் செய்திகள்.

கர்த்தருடைய பரிசுத்தமுள்ள நாமத்திற்கே ஸ்தோத்திரமுண்டாவதாக. ஆமென்.

காஷ்மீரத்தில் நான் தங்கியிருந்த கிறிஸ்தவ மிஷன் பள்ளியில்தான் கர்த்தருடைய பிள்ளையாகிய சாது கந்தையானந்த் அவர்களைச் சந்தித்தேன். கர்த்தரே நாங்கள் ஒருவரையொருவர் சந்திக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை அமைத்துக் கொடுத்திருந்தார். மேற்கு தீபெத்தில் தான் மேற்கொள்ளவிருக்கும் சுவிசேஷப் பணியைப்பற்றியும், அவ்விடத்துக் காரியங்களைப்பற்றியும் சற்று விளக்கமாக என்னிடம் கூறினார்கள். காஷ்மீரத்திலுள்ள கிறிஸ்தவ குருவானவர் ஒருவரிடமிருந்து மேற்கு தீபெத்பற்றிய போதிய தகவல்களையும் அவர்கள் கேட்டு விசாரித்து வைத்திருந்தார்கள். தேவன் எல்லாக் காரியங்களையும் தமது திருவுளச் சித்தப்படி ஆயத்தப்படுத்தியிருந்தார்.

தேவ எக்காள வாசக அன்பர்களான, தேவப்பிள்ளைகளாகிய உங்களை மேற்கு தீபெத்தினுக்குள் உடனே அழைத்துச் செல்லுவ

தற்கு முன்னர் "ஆசியாவின் ஸ்விட்சர்லாந்து" என்று அழைக்கப்படும் காஷ்மீரத்திலுள்ள சில காரியங்களைத் தேவநாம மகிமைக்காக இங்கு குறிப்பிட ஆசைப்படுகின்றேன்.



கர்த்தருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்பட்டுப் பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுப் பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பண்ணப்பட்ட ஒவ்வொரு ஆத்துமாவும் தேவனது சிருஷ்டிப்புகளில் சர்வவல்ல தேவனையே கண்கூடாகக்கண்டு அவரையே ஸ்தோத்திரிக்கும்.

உண்மையில் காஷ்மீரம் தேவனது படைப்பின் மாட்சிமைகளில் சிறந்ததொன்ருக விளங்குகின்றது. 80 மைல் நீளமும் 25 மைல் அகலமும் உள்ள இந்தக் காஷ்மீர் பள்ளத்தாக்கு இமயமலைத்தொடருக்கும், பீர்பஞ்சால் மலைத்தொடருக்கும் இடையே அழகுக் களஞ்சியமாகப் பரந்து கிடக்கின்றது. மலைவளமும், மலர்வனமும், பனியாறுகளும், கனிமரங்களும் மலிந்து எழில் தோட்டமாக விளங்கும் காஷ்மீர் "ஆசியாவின் பரதீசு" என்று அழைக்கப்படுகின்றது.

காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகருக்கே அழகுதந்து அதனை ஒட்டி விரிந்து கிடக்கின்றது 'தால் ஏரி'. இதன் நீளம் 5 மைல்; அகலம் 2 மைல். இதை முற்றுகையிட்டதுபோன்று சுற்றிலும் இருண்டு செறிந்த காடுகள், கனிகள் குலுங்கும் மரங்கள், பனி நிறைந்த உயர்ந்த மலைமுகடுகள், கண்களுக்குக் குளிர்ச்சி தரும் புல்வெளிகள் முதலானவை பார்க்கப் பார்க்க அலுக்காத அளவுக்கு இனிமையைப் பொழிந்து காட்சி அளிக்கின்றன.

தால் ஏரியில் நூற்றுக்கணக்கான உல்லாசப் படகுகள் மிதக்கின்றன. அநேக மக்கள் இப்படகு வீடுகளிலும் வாழ்கின்றனர். வெளி இடங்களிலிருந்து பெரும் பணங்களைக் கொண்டுவந்து மனமும், மாம்சமும் விரும்புகிற வழிகளில் அசுத்தமான பாவவாழ்க்கை புரியவரும் மக்களின் எண்ணிக்கை அதிகமாகும். தால் ஏரியில் மிதக்கும் ஒவ்வொரு படகு வீட்டுக்கும் ஒவ்வொரு பெயர் கொடுத்திருக்கின்றார்கள். "சூரியகாந்தி", "எகிப்து", "வாழ்க்கை என்பது அனைத்தும் அனுபவிப்பதற்கே" என்றெல்லாம் பெயர்களைக் கண்டேன். என்ன ஆச்சரியம்! அவற்றில் ஒரு அழகான, கண்கவர் உல்லாசப் படகிற்கு "லூசிபர்" என்ற பெயர் எழுதப்பட்டிருந்தது எழுத்தை நன்ருகக் கவனித்தேன். ஆங்கிலத்தில் லூசிபர் என்று மிகத் துலாம்பரமாக எழுதப்பட்டிருந்தது

"ஆம், நீ இல்லாத இடமேது? தால் ஏரிப்படகு வீடுகளில் நடக்கும் அனைத்துப் பாவக்களியாட்டங்களையும் சீராக முன்னின்று நடத்திவைத்து மக்களைச் செம்மையாக நரக பாதாளத்திற்கு இழுத்துச்செல்ல நீ இங்கு இருந்துதானே ஆகவேண்டும்" என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டேன்.

காஷ்மீரை அழகுபடுத்தும் மரங்களில் 'செனுர்' என்ற மரம் முக்கிய பங்கை வகிக்கின்றது. செனுர் மரம் ஒவ்வொன்றும் மிக உயர்ந்த அழகுச் செல்வமாகப் போற்றிப் பாதுகாக்கப்படுகிறது. காஷ்மீர் மாநிலத்தின் சட்டப்படி செனுர் மரத்தின் இலைகளையோ, கிளைகளையோ ஒடிப்பவர்கள் கடுமையான தண்டனைக்கு உள்ளாவார்களாம். ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னுல் மொகலாயப் பேரரசன் ஜஹாங்கீரால் இந்த செனுர் மரங்கள் காஷ்மீரத்துக்குக் கொண்டுவரப்பட்டதாம். ஒரு செனுர் மரம் பூமியில் வேர் பிடித்துத் தழைத்து மரமாவதற்குக் குறைந்தது ஐம்பது ஆண்டுகளாவது ஆகலாம் என்று கூறப்படுகிறது.

வானளாவி உயர்ந்து நிற்கும் இப்பெரும் செனுர் மரங்களில் பக்கத்து நாடுகளிலிருந்தெல்லாம் பறவையினங்கள் வந்து கூடு கட்டி வாழ்வதைக் கண்டேன். "அங்கே குருவிகள் கூடுகட்டும், தேவதாரு விருட்சங்கள் கொக்குகளின் குடியிருப்பு" (சங்.104:17) என்ற சங்கீதக்காரனின் வார்த்தைகள் அப்பொழுது எனது நினைவுக்கு வந்தன.

காஷ்மீரத்தில் பல நாட்கள் உட்கார்ந்து அதின் பற்பல இயற்கைக் காட்சிகளையெல்லாம் நாம் போய்ப் பார்க்கலாம்தான். ஆனுல் நான் சென்றது அதற்கல்லவே. அங்கிருந்த தினங்களில் நானும், சாது கந்தையானந்த் அவர்களும் எதையும் பார்க்க விரும்பவுமில்லை, போய்ப்பார்க்கவுமில்லை. காஷ்மீரத்தில் நான் பார்க்கவேண்டும் என்று அதிகமாக விரும்பியது, ஆசைப்பட்டது ஒன்றிருந்தது. அது யாதெனில், இயேசுவானவரின் கல்லறை என்று பிதற்றற்கா

ரர்களும், தேவப் பகைஞரும் கூறும் "காஷ்மீர் கல்லறை" ஒன்று தான். என்னுடைய ஆசையைத்தான் சாது ஐயா அவர்களும் கொண்டிருந்தார்கள் என்பதை அவர்களே முதலில் வாய்திறந்து கூறிவிட்டார்கள். பின்னர் நாங்களிருவரும் தீர ஆண்டவருக்குள் யோசித்து ஜெபித்தோம். ஆனால், பரிசுத்த ஆவியானவர் அதையும் பார்க்க எங்களை அனுமதிக்காததால் அதனையும் கைவிட்டுவிட்டோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

காஷ்மீரில் இருந்த தினங்களில் ஒவ்வொரு மாலைப் பொழுதிலும் நகரத்தை ஒட்டியுள்ள தால் ஏரிக்கரையில் நானும், சாது ஐயா அவர்களும் உட்கார்ந்து கர்த்தருடைய இரகசிய வருகையில் நாம் எப்படி ஆண்டவருடன் எடுத்துக் கொள்ளப்படுவோம், மோட்சத்தில் நம்முடைய வாழ்க்கை எப்படியிருக்கும் என்பது போன்ற பரலோகக்காரியங்கள் பற்றியும், மேற்கு தீபெத் பயணத்தைக்குறித்தும் நாங்கள் கலந்து பேசிக்கொண்டிருந்தோம். பகற் காலங்களில் அநேகமாக நாங்கள் இருவரும் மேற்கொள்ளவிருந்த தீபெத் ஊழியங்களுக்காகக் கூடிஜெபித்துக் கொண்டிருந்தோம், வேதவசனங்களைத் தியானித்தோம், பிரயாண ஆயத்தங்களைச் செய்தோம்.

கர்த்தாவின் மட்டற்ற அன்பின் தயவால் லடாக் செல்லுவதற்கான எனது பயணச்சீட்டு இரண்டு நாட்கள் இடைவெளியில் கிடைத்துவிட்டது. எனவே நாங்கள் இருவரும் ஒன்றாக ஒரே பஸ்ஸில் செல்லக் கர்த்தர் வழிதிறந்து கொடுத்துவிட்டார். மிகுதியான ஜெபத்தோடு எங்கள் மேற்கு தீபெத் பயணத்தை ஆரம்பித்தோம். ஸ்ரீநகரிலிருந்து ஒருநாள் காலைவேளை நாங்கள் எங்கள் மூட்டை முடிச்சிகளுடனும், ஏராளமான தீபெத் மொழிக் கைப்பிரதிகள், சாது ஐயா அவர்கள் கொண்டுவந்திருந்த உருது மொழிக் கைப்பிரதிகள், வேதாகமங்கள், சுவிசேஷப்பங்குகள் ஆகியவைகள் சகிதம் பஸ்நிலையம் சென்றோம். எங்கள் பொருட்கள் எல்லாம் பஸ்நிலைய உத்தியோகஸ்தர்களால் எடையிடப்பட்டு பஸ்ஸின் மேல் ஏற்றப்பட்டது. கைப்பிரதிப் பெட்டியில்தான் ஒரு உத்தியோகஸ்தனின் கண்ணோட்டம் இருந்தது. ஓரிரு கேள்விகளுக்குப் பின்னர் அதை எடுத்துச்செல்ல எங்களை அனுமதித்துவிட்டான். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக. ஆண்டவருக்குத் துதி செலுத்தினோம்.

எங்கள் பஸ் சிறிதான ஒன்றுதான். பஸ் பயணிகளில் அநேகர் மேலை நாடுகளிலிருந்து வந்தவர்களே. அநேகருடைய கரங்களில் நூதனமான புகைப்படக் கருவிகளிருந்தன. ஸ்ரீநகர் பட்டணத்தைக் கடந்து பஸ் நெடுஞ்சாலை மார்க்கமாக விரைந்து சென்றது. இருபுறமும் செழிப்பான வயல்வெளிகளும், ஆப்பிள் உட்பட பலவகையான பழத்தோட்டங்களுமிருந்தன. பல மைல்கள் ஓட்டத்திற்குப்பின் பஸ் மலை ரஸ்தாமீது ஏறத்தொடங்கினது. ஏறத்தாழ

னேஜ பதினெரு மணிக்கு ஒரு மலைக்கிராமத்தில் தேநீருக்காக வண்டியை நிறுத்தியிருந்தார்கள். இவ்விடத்திலிருந்து பஸ் சற்று அடு முரடான பாதை வழியாகத் தொடர்ந்து ஓடி வானளாவ ஓங்கி நிற்கும் இமயமலைகளின் ஊடாகச் சென்றுகொண்டிருந்தது. சிம் லாவிலுள்ள இமயமலைகளையும், பத்ரிநாத், உத்தர்காசி போன்ற இடங்களிலுள்ள இமயமலைத் தொடர்களையும் நான் கண்டிருக்கின் றேன். ஆனல், இந்த காஷ்மீர் மலைகளில் தேவனது சிருஷ்டிப்பின் மகத்துவத்தை இன்னும் அதி அற்புதமாகக் கண்டு ஆண்டவரை ஸ்தோத்திரித்தேன். எத்தனை விதமான இமயத் தாவரங்கள், எத் தனை வண்ண, வண்ண மலர்கள், இதுவரைப் பார்த்திராத விந் தைப் பறவையினங்கள். ஆ நமது தேவன் எவ்வளவு மகத்துவ முள்ளவர்! நாம் எவ்வளவு பாவத்துாசிகள்!

நண்பகல் சுமார் ஒரு மணிக்கு எங்களை ஏற்றிவந்த பஸ் சோனுமார்க் என்ற இடத்தில் வந்துநின்றது. பஸ் பயணிகள் அனை வரும் இங்கு தங்கள் மத்தியான உணவை அருந்தினர். இந்த சோனுமார்க் மிக மிக அழகான ஓரிடம். மலைகளின் உச்சியில் பனி உறைந்து கிடக்கின்றது. கண்ணுக்கெட்டும் தூரம்வரைப் பசுமைப் புல்வெளிகள் பரவிக் காணப்படுகின்றது. கூட்டம் கூட்டமாகக் காஷ்மீரி ஆடுகள், மட்டக் குதிரைகள் புல் மேய்ந்துகொண்டிருக் கின்றன. கண்கொள்ளாக்காட்சி.

நண்பகல் உணவுக்குப்பின்னர் எங்கள் பிரயாணம் ஆரம்ப மாயிற்று. சில மைல்கள்தான் பஸ் சென்றது, அதற்குள்ளாகப் பஸ் எந்திரத்தில் பழுதுள்ளது என்று வண்டியைத் திருப்பி மீண்டும் சோனுமார்க்கிற்கே டிரைவர் கொண்டுவந்து சேர்த்தான். அங்குள்ள பஸ் பழுதுபார்க்கும் இடத்தில் இரண்டு மணி நேரத்திற்கும் அதிக மாக அது செப்பனிடப்பட்டது. நேரம் அதிகமாகிவிட்டதால் பஸ் பயணிகள் அனைவரையும் சோனுமார்க்கிலேயே இராத்தங்க டிரை வர் கூறினபோதினும் சில பயணிகள் விரும்பாதபடியால் உடனே பஸ் புறப்பட்டது. பலமைல்கள் வந்ததும் ஓரிடத்தில் பஸ் ஒவ் வொரு திருப்பங்களாக மேலே வளைந்து, வளைந்து ஏறத்தொடங் கிற்று. ஒவ்வொரு திருப்பமாக ஏறிக் கடைசியாகச் செங்குத்தான மகா உயரமான மலை விழிம்பிற்கு வந்துசேர்ந்து நகர ஆரம்பித்தது. வழியில் பனிக்கட்டிகள் பாளங்களாக உறைந்து கிடந்தன. கீழே செங்குத்தான பள்ளத்தாக்கிலும் பனிமலைகள் அப்படியே மேலி ருந்து சரிந்து விழுந்து முதலைகள் இரைக்காகத் தங்கள் வாயை விரிவாகத் திறந்துகொண்டிருப்பதுபோலக் கிடந்தன. சில பனிப் பாறைகளின் ஊடாகத் தண்ணீர் ஓடிக்கொண்டே இருப்பதால் இருண்ட கெபிகளான சுரங்கப் பாதையை அவற்றில் தண்ணீர் உருவாக்கியுள்ளன. அந்தவிதமான கெபிகளுக்குள் பஸ் விழுந்து விட்டால் அவ்வளவுதான், மறைந்தே போய்விடும். அவ்விதமான

பெரும் பனிப்பாறைகள் அருகில் பஸ் வரும்போது குளிர்பதனப் பெட்டிகளுக்குள் (Refrigerator) நாம் இருப்பதுபோலத் தெரிகின்றது. உயரமான மலைகளிலிருந்து வரும் பனிக்கட்டித் தண்ணீர் ரஸ்தாவைக் கடந்து பல இடங்களில் ஓடிக்கொண்டிருந்தது. இவ்விதமான ஒவ்வொரு தண்ணீர் ஓட்டத்தைப் பஸ் கடந்து செல்லுகையில் டிரைவர் தனது முழுத்திறமையையும் செயல்படுத்துகின்றார். நமக்கு மரண நிழலின் பள்ளத்தாக்கு ஒன்றைக் கடந்துசெல்லுவது போலிருக்கின்றது. ஸ்ரீநகர்–லடாக் ரஸ்தாவில் மகா பயங்கரமான இடங்களில் இதுவே பிரதான ஒன்றாகும். இங்கு அநேகர் மாண்டுள்ளனர். இங்குதான் நாங்கள் சென்றுகொண்டிருந்த பஸ் திடீரென இருமுறைகள் சரிந்துவிழுவதைப்போன்று முழுமையாக ஆடிற்று. இதைத் தொடர்ந்து பஸ்ஸிலுள்ள அத்தனை பயணிகளும் சத்தமிட்டுக் கோவென்று அழ ஆரம்பித்துவிட்டனர். சில பெண்கள் ஏங்கி, ஏங்கி அழுதனர். அவர்களின் ஏக்கம் சற்று நேரம்வரை நீடித்தது. அந்த மகா பயங்கரமான உச்சியில் பஸ் நிறுத்தப்பட்டது. அங்கு ஒரு நினைவுச் சின்னம் உள்ளது. நமது இந்திய இராணுவக் காப்டன் ஒருவரும், அவரது முழுக் குடும்பமும் அந்த செங்குத்தான விழிம்பிலிருந்து ஜீப் உருண்டு விழுந்ததில் உருத் தெரியாமல் கொல்லப்பட்டுவிட்டனராம். அவர்கள் அணிந்திருந்த துணிகளில் சில துண்டுகள் மாத்திரம்தான் இறுதியில் கிடைத்ததாம். அங்கு எழுப்பப்பட்டுள்ள அந்த நினைவுச் சின்னத்தைத் தெய்வமாக வழிபட்டுச் செல்லுகின்றனர். ஊதுபத்திகள் நிறைய கொளுத்தப்பட்டிருந்தன. சிகப்புக் கொடிகள் அதில் பறக்கின்றன. அந்தப் பாதையில் செல்லும் மோட்டார் ஓட்டிகள் அந்தக் காப்டனின் ஆவி தங்கள் வாகனத்திற்கு ஏதாவது தீங்கிழைத்துவிடக்கூடாது என்பதற்காகப் பயந்து இப்படிச் செய்கின்றனராம். ஏனெனில், அந்த ஆவி இன்னும் அங்கேயே உலாவுவதை மோட்டார் ஓட்டிகள் அடிக்கடிப் பகலிலும், இரவிலும் பார்க்கின்றார்களாம். அந்த ஆவி சிலசமயங்களில் மோட்டார் வாகனங்களுக்குச் சமிக்ஞை (Signal) கூட காட்டுகின்றதாம்!

உண்மையில் எந்த தைரிய நெஞ்சினனையும் நிலைகுலையப் பண்ணிவிடும் மரண நிழலின் பள்ளத்தாக்கு அது. "தெய்வாதீனமாகவே நாம் அந்த இடத்தில் உயிர் பிழைத்தோம். அனைவரும் நிச்சயமாக செத்து மடியவிருந்தோம்" என்று டிரைவரும், கண்டக்டரும் பின்னர் எங்களிடம் கூறினார்கள்.

இந்த மரண நிழலின் பள்ளத்தாக்கைக் கடந்ததும் சில மைல்கள் ஓட்டத்திற்குப் பின்னர் புகழ்பெற்ற ஜோஜிலா கணவாய் (Zojila) வருகின்றது. இவ்விடத்தின் உயரம் 11,578 அடியாகும். எங்கும் பனிமூடிய சிகரங்களாக இருண்டுகிடக்கின்றன. சில இடங்களில் பெரும் மலைகள் கம்பீரமாக வானளாவ நிற்கின்றன. இந்த

ஜோஜிலா கணவாயை நாங்கள் கடந்து செல்லுகையில் இரவு மணி 7.30 ஆகியிருந்தபோதினும் நல்ல ஒளியுடன் மந்தாரம் காணப்பட்டது. பொதுவாக இந்த வடக்குப் பிராந்தியங்களில் பூரண இருள்சூழ இரவு 8.30 மணி ஆவதை நான் கவனித்தேன்.

மேற்கண்ட கணவாய் வழியாகச் சத்துருக்கள் நம் நாட்டிற்குள் நுழைந்துவிடாமலிருக்க நமது இராணுவத்தினர் கூடாரமடித்து அக்கடுங்குளிரில் கணவாயைக் கண்காணித்து வருவதைக் கண்டேன். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய நமது ஐம்புலன்களாகிய கணவாய்களையும் பாவம் உட்பிரவேசியாமல் நாம் எத்தனை விழிப்போடு பாதுகாக்கவேண்டுமென்று ஆண்டவர் அந்த மாலைவேளை எனக்கு நினைப்பூட்டினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

ஜோஜிலா கணவாயைக் கடந்துசென்ற சிறிது நேரத்திற்கப்பால் நானும், சாது ஐயாவும் பாட்டுப் பாடத்தொடங்கிவிட்டோம். ஐயாவுக்குப் பழைய காலத்துப் பரிசுத்தவான் 'சாது கொச்சுக்குஞ்சு'வுடைய பாடல்கள்தான் மிகவும் பிடித்திருந்தன. எனவே, அவருடைய பாடல்களையும், கீர்த்தனைப் பாடல்களையும் வெகுநேரம் வரைப் பாடினோம். பின்னர் நான் சில ஆங்கிலப் பல்லவிகளையும் தேவ கிருபையால் பாடினேன். எனக்குப் பின்னாலிருந்த ஒரு பிரெஞ்சு நாட்டுக் கிறிஸ்தவ இளம்பெண்ணின் உள்ளத்தில் இது உணர்த்துதலை உண்டாக்கவே அவள் அடுத்த நாளில் என்னுடன் அன்பாகப் பழகத்தொடங்கினாள். இதை நான் அனுகூலமாக்கிக்கொண்டு கிறிஸ்து பெருமான் மூலமாயுள்ள இரட்சிப்பின் வழியையும், நித்தியஜீவனையும் குறித்து ஓரிரு தடவைகள் அவளுக்குக் கூறினேன். அவளும் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளுவதாக உறுதி கூறினாள். மேற்கு தீபெத்திலும் நான் பலமுறை அவளைச் சந்திக்க நேரிட்டது. காணும்போதெல்லாம் சத்தியத்தை அவளுக்கு நினைப்பூட்டியிருக்கின்றேன். இந்த ஆத்துமாவுக்காக அன்புடன் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

இரவானபடியால் வலது, இடது பக்கத்திலுள்ள அகல பாதாளப் பள்ளத்தாக்குகளை நாங்கள் அதிகமதிகமாகக் கவனிக்கமுடியவில்லை. எனினும், சில இடங்களில் எங்களது ஆபத்தான மரண நிலையை நாங்கள் உணரமுடிந்தது. கெடு பாதாளத்தில் சிந்து நதி ஓடுவதைக் கண்டோம். அநேக சமயங்களில் மரிக்க நான் ஆயத்தமாகிக் கண்களை மூடி "ஆண்டவரே என் பாவங்களையெல்லாம் மன்னியும். என்னை உம்முடைய ராஜ்யத்தில் சேர்த்துக்கொள்ளும்" என்று நான் மனதிற்குள் ஜெபித்து மரிக்க ஆயத்தமானேன்.

பல மணிநேர ஓட்டத்திற்குப்பின் பஸ் ஓரிடத்தில் நிறுத்தப்பட்டது. அங்கு ஒரு இராணுவ அதிகாரி பஸ்ஸிற்குள் வந்து எல்லாரையும் அப்படியே ஒருபார்வை பார்த்தார். இந்தியரல்லாத

வெளி நாட்டுக்காரர்களின் கரங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பாரம் கொடுக்கப்பட்டது. அதை அவர்கள் பூர்த்திசெய்து கொடுத்தபின் அந்தப் பாரத்துடன் அவர்களது பாஸ்போர்ட்டுகள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் பஸ் போக அனுமதிக்கப்பட்டது.

சரியாக இரவு 11.30 மணிக்கு எங்கள்பஸ் கார்க்கில் (Kargil) என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தது. பஸ்ஸிலுள்ள அனைவரும் ஆங்காங்குள்ள சிறிய விடுதிகளில் படுக்கச் சென்றனர். பரதேசிகளாகிய நாங்கள் இருவரும் ஒரு விடுதிக்காரனண்டை சென்றோம். அவன் " உங்களுக்கு இங்கே இடமில்லை " என்றான். " பணம் தருகின்றோம் தயவுசெய்து இடம் கொடு " என்று கூறியும் பயனில்லை. இனி எங்கே செல்லுவது? மனுஷகுமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை என்றுகூறிய தந்தை வழிவந்த மக்களுக்குத் தங்க இடமேது என்று எண்ணிக்கொண்டு அந்தக் கொடுங்குளிரில் கார்க்கில் என்ற அவ்விடத்துத் தெரு வீதியின் ஓரமாக ஓரிடத்தில் இருவரும் சுருண்டு படுத்துக்கொண்டோம். வானம் பனியைக் கொட்டுகையில் கண்களுக்குத் தூக்கமேது? இருவரும் தூக்கமின்றி இரவைக் கழித்தபோதினும், எங்கள் உள்ளம் தேவ சமாதானத்தாலும், சந்தோஷத்தாலும் நிறைந்தது. பரிசுத்தவான்களும், பக்தர்களும் அருமை இரட்சகர் இயேசுகிறிஸ்துவுக்காக இரத்த சாட்சிகளாக மரித்திருக்கையில் இந்த நீசப்பாவத் தூசிகளுக்கு இந்தப் பரலோக பாக்கியமாவது கிடைத்ததே என்று எண்ணி மட்டற்ற ஆனந்தம்கொண்டோம். அகமகிழ்ந்தோம்.

N சாமுவேல்.

குறிப்பு:- கடந்தமாத இதழின் 24-ம் பக்கத்திலுள்ள இமய மலைப்பகுதியிலுள்ள 'குரு' என்ற பதத்தையும் 25-ம் பக்கத்திலுள்ள 'குரு' என்ற பதத்தையும் 'குளு' (Kulu) என்று மாற்றி வாசிக்கவும். 15-ம் பக்கத்திலுள்ள பனைஹால் சுரங்கத்தின் நீளம் 1.6 (ஒன்று புள்ளி ஆறு) மைல் என்று வாசியுங்கள்.

தேவ எக்காளம்

ஆன்ம ஈடேற்றத்திற்கெனப் பிரசுரமாகும் ஓர் ஆவிக்குரிய மாதாந்திர வெளியீடு. இது எந்த ஒரு சபைப் பிரிவையும் சார்ந்த ஒரு பத்திரிக்கையல்ல. ஆண்டுச் சந்தா ரூ. 5. மட்டுமே.

அனுப்பவேண்டிய முகவரி:-

DEVA EKKALAM,
Kotagiri P. O. - 643 217,
Nilgiris, S. India

கள்ளனைக் கண்பார்த்து விண்ணில் சேர்த்த கருணாகரன்!

கிறிஸ்து இரட்சகரின் வலது இடது பக்கங்களில் சிலுவைக ளில் தொங்கிய கள்ளர்கள் இருவரைப்பற்றிய குறிப்பிடுதல் இல்லா மல் இயேசுவின் சிலுவைச் சரித்திரத்தை மாத்திரம் கூறிமுடித்தால் அது முற்றுப்பெற்ற ஒரு சரித்திரமாயிருக்க முடியாது. அந்தச் சிலு வைக் கள்ளர்களில் ஒருவன் இயேசுவைத் தனது சொந்த இரட்சக ராக ஏற்றுக்கொண்டு உடன் தானே இரட்சிப்பைக் கண்ட டைந்தான்.

இந்தியாவிலும் தனது ஜீவிய காலத்தில் ஒரு கள்ளனாக வாழ்ந்து மரிக்கையில் ஒரு பரிசுத்தவானாக மரித்தது மாத்திரமல்ல, தான் மரணமடையப்போகும் சரியான மணி நேரத்தைக்கூடத் தீர்க்கதரிசனமாக முன்பே கூறிவிட்ட ஒரு கள்ளனின் சரித்திரம் உண்டு. அவனது பெயர் நர்சோபா என்பதாகும்.

மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள தீச்செயல்கள் புரியும் துஷ்டர் களின் இனத்தில் பத்தொன்பதாம் நூற்றுண்டின் மத்தியில் வட் காட் என்ற இடத்தில் நர்சோபா பிறந்தான். மேற்குறிப்பிட்ட இனத்தவர்கள் பெரும்பாலும் திருடியும் கொள்ளையடித்துமேதான் தங்கள் ஜீவனம் நடத்திக்கொண்டிருந்தார்கள். இவ்விதமான ஈனத்தொழிலைச் செய்தபோதினும் அந்த ஜாதியினர் தங்கள் தொழி லையும், தங்கள் குலத்தையும்குறித்து மிகவும் பெருமையாக எண் ணிக்கொண்டார்கள். இம்மக்களைப்போன்றே நர்சோபாவும் தான் ஒரு திருடனாக இருப்பதற்காகத் தன்னை உயர்வாக நினைத்துக் கொண்டான்.

அவன் மிகவும் துடுக்கும் யூகமுமுடையவனுயிருந்தமையால் இளம் வயதிலேயே தனது திருட்டுத் தொழிலில் சிறந்த திறமை சாலியாயிருந்தான். ஒரு சமயத்தில் ஒரு ஆங்கிலேய நீதிபதியின் வீட்டிற்குள் இரவில் நுழைந்து திருடிவிட்டு மறுநாள் காலையில் அவனே அவரண்டை சென்று அவரது வீட்டுத் திருட்டு பற்றித் தகவல் கொடுத்தான். திருட்டு பற்றிய தகவல் அளித்தால் அந்த நீதிபதி தனக்கு ஏதாவது வெகுமானம் தருவார் என்று அவன் எண்ணினுன். ஆனுல், அவர் அவனைக் கடுமையாக எச்சரித்து அனுப்பி வைத்தார்.

ஒரு தடவை ஒரு வெள்ளைக்கார போலீஸ் அதிகாரி நர்சோ பாவை அவனது திருட்டுத் தொழிலை விட்டுவிடும்படியாகவும், தவ றினுல் சிறைக்கூடத்தில் போடப்போவதாகவும் எச்சரித்தார். தன்னை எச்சரித்த போலீஸ் அதிகாரியைக் கேலி செய்யும் பொருட்

டாக அந்த நாள் இரவில்தானே அவருடைய வீட்டிலிருந்த சமையல் அறைப் பாத்திரங்களையெல்லாம் அவன் தூக்கிச் சென்றுவிட்டான். அடுத்தநாள் அதிகாலையில் அந்த போலீஸ் அதிகாரி ஒரு காப்பிகூடக் குடிக்க இயலாமல் சாமான்கள் யாவும் பறிபோய்விட்டன. சமையல்காரன், திருட்டு பற்றி அதிகாரியிடம் சொல்லவும் அவர் உடனே நர்சோபாவை அழைத்துவரச் சொன்னர்.

“நேற்று இரவில் நீ எனது வீட்டுச் சமயலறைப் பாத்திரங்கள் அனைத்தையும் களவாடிச் சென்றாயா?” என்று அவர் கேட்டார்.

“ஆம். துரையவர்களே,” என்று நர்சோபா சாந்தமாகப் பதிலளித்தான். “அந்தப் பொருட்களினுல் எனக்கு எவ்வித பயனும் இல்லையாதலால் நீங்கள் ஆள் அனுப்பி அவைகளை என் வீட்டிலிருந்து சேகரித்துக்கொள்ளுங்கள்” என்று தொடர்ந்து கூறினுன்.

“உனக்குப் பயன்படவில்லையெனில் அவற்றை ஏன் இங்கிருந்து திருடவேண்டும்?” என்று அந்த அதிகாரி கோபத்துடன் கேட்டார்.

“நீங்கள் என்னைச் சிறைக்கூடத்தில் போடப்போவதாக பயமுறுத்தினபடியாலேயே நான் எனது திறமையைக் காண்பிக்கும்படியாக அப்படிச் செய்தேன்” என்றுன்.

நர்சோபாவைத் திருட்டுத் தொழிலில் ஊக்குவித்தவர்கள் அவன் ஊரிலுள்ள வட்டிக் கடைக்காரர்களும், அதிகாரிகளுமேயாவார்கள். திருட்டுப் பொருட்களை அவனிடமிருந்து குறைந்த விலைக்கு வாங்கி அவற்றை அதிக விலைக்கு விற்று அவர்கள் ஆதாயம் சம்பாதித்துவந்தார்கள். இந்தவிதமான மக்களின் ஆதரவும், பக்கபலமும் அவனுக்கு இருந்தபடியால் தனது தொழிலை அவன் உற்சாகத்துடன் செய்தது மாத்திரமல்ல படிப்படியாக மற்ற திருடர்களும் இவனுடன் சேர்ந்து ஒரு கூட்டமாக அவர்கள் செயல்படத் தொடங்கினர்கள்.

ஒருநாள் நர்சோபா ஒரு எண்ணெய் வியாபாரியின் வீட்டில் திருட முயற்சித்தான். அந்த எண்ணெய் வியாபாரி நல்ல பலசாலியாகவிருந்தபடியால் நர்சோபாவை உறுதியாகப் பிடித்துக்கொண்டான். தப்பிக்க வழியில்லாமல் நர்சோபா அவனைத் தனது கத்தியால் குத்திவிட்டுத் தானும் அந்தக் கத்தியால் தனக்குப் படுகாயங்களை உண்டுபண்ணிக் கொண்டான். சில நாட்களில் அந்த எண்ணெய் வியாபாரி இறந்துபோனுன்.

இந்தச் சம்பவமானது நர்சோபாவின் வாழ்க்கையை அசைத்துவிட்டது. அந்த மரணத்திற்காக அவன் பெரிதும் மனவேதனையுற்றதுடன், இனிதான் ஒரு நல்ல மனிதனுக வாழ்க்கை நடத்தவும் விரும்பினுன். அவன் தனது இனத்தவர்களில் ஒருவரான சங்கை

மெசோபா என்பவரிடம் சென்று கிறிஸ்து பெருமானைப்பற்றி அறியத்தொடங்கினான். சங்கை மெசோபாவும் நர்சோபாவைப்போல ஒரு காலத்தில் திருட்டுத் தொழில் செய்து பின்னர் மனம் திரும்பியவர்தான். மெசோபாவின் போதனையால் நர்சோபா மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டான். ஆனால், அவனிடமிருந்து திருட்டுப் பொருட்களை வாங்கி ஆதாயம் சம்பாதித்தவர்கள் அவனது புதுவாழ்வை விரும்பாமல் அவனுக்கு எதிர்த்து நின்றார்கள்.

ஆனால் நர்சோபா தனது விசுவாசத்தில் உறுதியாக நின்று இயேசுகிறிஸ்துவை உண்மையுடன் பின்பற்றிச் செல்லத் தனது மனதைத் திடப்படுத்திக்கொண்டான். எனவே அவன் சங்கை மெசோபாவைத் தனக்குத் திருமுழுக்கு அளிக்கும்படி வேண்டினான். அந்த குருவானவர் நர்சோபாவை கொஞ்ச நாட்கள் பரீட்சித்து அவனது உறுதியான கிறிஸ்தவ நிலையைத் தெளிவாக அறிந்துகொண்டபடியால் அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்.

நர்சோபா இப்பொழுது ஆண்டவருக்குள் முற்றும் புதிய மனிதனாக மாறிவிட்டான். அவனது மாற்றப்பட்ட புதிய வாழ்க்கையைக் கண்டவர்கள் அவன் ஒரு காலத்தில் புகழ்பெற்றதொரு திருடனாயிருந்தான் என்பதை ஏற்றுக்கொள்ளக் கூடாதிருந்தது.

நர்சோபாவின் மத மாற்றத்தை மக்கள் விரும்பவில்லை. மத மாற்றம் என்பது ஒருமனிதன் தனது சொந்த ஜனங்களுக்கு விரோதமாகச்செய்யும் மிகவும் ஈனமான செயலாக அந்நாட்களில் கருதப்பட்டது. எனவே உபத்திரவங்கள் நர்சோபாவைத் தொடரலாயின. தனது ஜீவனத்திற்காக அவன் வைத்திருந்த மாடுகளை மக்கள் கொல்லத் தொடங்கினார்கள். அவனது வாழ்க்கையைச் சாவிலும் கசப்பாக்கத் தங்களாலானமட்டும் எல்லா இடையூறுகளையும், தொந்தரவுகளையும் அளித்தார்கள். அவன் தனது இன ஜனத்தாரால், மற்ற மக்களால் அனுபவிக்கும் கொடுமைகளைக் காண சகிக்காத மிஷனரி ஒருவர் அவனது பாதுகாப்புக்காகப் போலீஸ் அதிகாரிக்கு மனுச் செய்திருந்தார். இதைஅறிந்த நர்சோபா அந்த மிஷனரியை அணுகி அந்த மனுவை வாபஸ்வாங்கும்படியாக அவரைத் தாழ்மையுடன் மன்றாடியதுடன் கிறிஸ்துவுக்காக எல்லா உபத்திரவங்களையும் தான் கட்டாயம் சகிக்கவேண்டுமென்றும், அது தனதுபரிசுத்த கடமை என்றும் கூறினான்.

இயேசுவை ஏற்றுக்கொண்ட பிற்பாடு நர்சோபா ஒரு ஜெப மனிதனாக மாறிவிட்டான். ஜெபிக்கத் தவறிவிட்டால் நிலை தடுமாறியவனைப்போல அவன் காணப்படுவான். தரையில் முகங்குப்புற விழுந்து கால்களை நீட்டிப் படுத்திருந்து அவன் பலமணி நேரங்கள் ஒரே நேரத்தில் ஜெபிப்பது வழக்கமாகும். இவ் விதமாக அவன்

எந்த இடத்திலும், எந்த நேரத்தில் வேண்டுமானாலும் ஜெபிப்பான். பிரசங்கித்தாலும் ஒரே சமயத்தில் மூன்றுமணி நேரம் தொடர்ந்து பிரசங்கிப்பான்.

நர்சோபாவின் வாழ்க்கையில் காணப்பட்ட தூய்மையான மாற்றத்தைக் கண்ட மக்கள் பின்வந்த நாட்களில் அவனைப் பெரிதும் கனம் பண்ணத் தொடங்கினார்கள். அவன் தனது மரணகால பரியந்தம் ஏறத்தாழ நூறுபேரைக் கிறிஸ்து இரட்சகருக்காக ஆதாயப்படுத்தியிருந்தான்.

நர்சோபா இயேசுவோடு மிகவும் நெருங்கி ஜீவித்து வந்தபடியால் அவனது ஜீவன் பிரியும் சரியான நேரத்தையும் கூட த் தேவன் அவனுக்குத் திட்டமாக வெளிப்படுத்தியிருந்தார். அது 1912-ம் வருடமாகும். தன்னுடைய மரண தினத்தன்று அவன் தனது எருமை மாட்டில் பால் கறந்துவிட்டுத் தனது ஆகாரத்தையும் ஆயத்தம் செய்து புசித்ததற்கப்பால், தனக்கு அன்பான மக்களிடத்தில் அன்றையதினம், தான் தன்னுடைய இயேசு இரட்சகரைச் சந்திக்கப்போவதாகக் கூறினான். அவன் தனது படுக்கையை ஆயத்தப் படுத்தி ஒழுங்காக அதனை விரித்து அதின்மேல் சீராகப் படுத்துக் கொண்டு தன்னைச் சுற்றி நின்ற கிறிஸ்தவ மக்களிடம் தனக்கு விருப்பமான சில பாட்டுகளைப் பாடச் சொன்னான். பின்னர் தானும் அவர்களுடன் சேர்ந்து பாட ஆரம்பித்தான்.

மெதுவாக அவனது பாடல் ஒலி பெலவீனமடையத் தொடங்கியது. சற்றுநேரத்தில் அவனது குரல் முழுமையாக நின்று போயிற்று. இதோ, அவன் அதிகமதிகமாக நேசித்த தனது ஆண்டவரோடு பரலோகத்தில் சதாகாலங்களிலும் ஜீவிக்கச் சென்றிருந்தான்.

Courtesy: "LIGHT OF LIFE"

"நீ உன்னைப் பரிசுத்தமாகக் காத்துக்கொள்ள மனமற்றிருக்கும்வரைத் தேவன் உன்னைக்கொண்டு எதுவுமே செய்யமாட்டார். மோசம் போகக்கூடிய அளவுக்குத் தங்களிடம் தகுதியோ, அல்லது நரகம் செல்லக்கூடிய நிலைக்கு மட்டமான ஜீவியமோ இல்லையெனத் தங்களுக்குள் எண்ணிக்கொண்டு தங்களுக்கேற்றதோர் சிறிய மார்க்க அனுச்சாரத்தை வைத்துக்கொண்டிருக்கும் கிறிஸ்தவ மக்கள் உண்டு. இவர்களை அப்படியே நரகத்திற்குத் தள்ளிவிட ஆண்டவர் நன்கு அறிந்திருக்கின்றார். தப்பவேமுடியாது. மோட்சத்தில் தேவன் இம்மக்களுக்கென்று அதில் பாதியும், இதில் பாதியுமான அரைகுறை வீட்டை அமைப்பவரல்ல. இதை அம்மக்கள் உணர்ந்து நரகத்திற்குச் செல்லுவதற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன்னராவது தங்கள் வழிகளை மாற்றிக்கொண்டால் நித்திய நன்மையளிக்கும்".

(BILLY SUNDAY)

அன்பின் சொரூபி அவர்!
என்னை ஆதரித்திடும் அன்பின் சொரூபி அவர்!!

இவ்வுலக மாந்தர் என்னை நேசிப்பார்கள் – என்னில் அன்புகூருவார்கள் – எனக்கு ஆதரவாய் இருப்பார்கள் – எனக்காய் உயிர்விடுவதைப்போல்கூட அழகாய் நடிப்பார்கள். எப்பொழுது? என்னிடம் செல்வமிருந்தால் மாத்திரம்! அல்லது நான் வசதியுடன் வாழ்வதைப் பார்த்தால்! அல்லது மாதந்தோறும் ஊதியம் நல்கும் உயர்ந்த உத்தியோகத்தில் நான் இருந்தால்! அல்லது திறமையும், சாமர்த்தியமும், உழைப்பும், அழகும், அந்தஸ்தும், பக்தியும் என்னிடம் குடிகொண்டிருந்தால்! ஆம். என்னிடமிருந்து ஏதாவதொரு நன்மையைப் பெறலாம் என்ற நோக்கத்திற்காக!

மேற்கண்டவைகள் என்னிடம் இல்லாதிருக்குமானால், முக்கியமாக, நான் பணமற்று வெறுங்கையனாகவிருந்தால் இவ்வுலகம் என்னை நேசிக்குமா? மக்கள் என்னில் அன்புகூருவார்களா? என்னிடம் ஆசையுடன் பேச விரும்புவார்களா? என்னைக் கண்ணோறிட்டுப் பார்ப்பார்களா? என்னோடு பழகுவார்களா? எனது சுக துக்கங்களை விசாரிப்பார்களா? எனது கண்ணீர், கவலைகளில் உண்மையாய்ப் பங்குகொள்வார்களா? எனக்கு இரங்கி உதவுவார்களா?

ஒருபோதும் இல்லை, இல்லவே இல்லை. பொல்லாத உலகம். மாய்மாலமான உலகம். இதுதான் உலகநேசம். இதுதான் இப்பிரபஞ்சத்தின் வஞ்சக அன்பு.

ஆனால், ஒருவர் எனக்குண்டு. அவர்தான் என் அன்பின் சொரூபி. அவர் என் சொந்த இரட்சகர். அவருடைய அன்பில் கடுகளவேனும் மாற்றம்கிடையாது. அந்தப் பரலோக அன்பினுக்கு எல்லைக் கோடில்லை. அது ஆச்சரியமான தேவ அன்பு!

நான் நேசிக்கப்பட எவ்விதத் தகுதியும் இல்லாதிருந்தபோது அவர் என்னை நேசித்தார். அவரது அன்பினுக்கு விரோதமாகக் கலகம்செய்யும் ஓர் கலகக்காரனாயிருந்தபோது அவர் என்னை நேசித்தார். நரகத்தின் பாதையில் நான் விரைந்து சென்றுகொண்டிருந்தபோது அவ்வன்பு என்னை நேசித்தது. அந்த அன்பின் ஜோதி நாள்தோறும், நிமிஷந்தோறும், அன்றும் இன்றும் மாற்றமின்றி என்னை நேசிக்கின்றார். ஆ, என் ஆருயிர் அன்புப் பிழம்பே, உமது மாபெரும் நேசத்தினுக்கு நான் என்ன ஈட்டைச் செலுத்தக்கூடும்?

கீழே ஒரு அழகான ஆங்கிலப் பாடல். மேற்கண்ட கருப்பொருளின் அடிப்படையில் அது அமைந்துள்ளது. ஜெபத்துடன்

பாடலினுள் பிரவேசித்து நேச தகப்பனின் மட்டில்லா அன்பிற்
காய் அவரை வாழ்த்திப் போற்றுவோம்:-

Man may love me
  If he finds me lovable.
But my God loved me
  When utterly unlovable.
Man may love me
  If he finds me religious

But my God loved me
  When utterly rebellious

Man may love me
  When my fortune's going well

But my God loved me
  When I was on my way to hell

Man may love me
  Bu-t that is the end

But my God loved me
  Even His Son to send
Man may love me
  For the sake of his own gain
But my God loved me
  Though it brought Him only pain.
Man may love me for a day
  And then hate me, to my sorrow
But my God loves me today
  And shall love me still tomorrow
Unto my God ten thousand times
  Ten thousand thanks, I say
For He's not Man, He's God
  Today and for alway!

— Luai Chin Thang.

(Courtesy:- Light of Life, Bombay.)

Edited and Published by N. Samuel, Kotagiri-643217, Nilgiris.
Printed at the Thoothan Press, Newport Street, Nagercoil.